ExamsDaily

## TNUSRB PC Exam: Test Yourself | பொதுத்தமிழ் வினா – விடை!! Day 10!!!

Q.1)Opt: b

அளி - கருணை

Q.2)Opt: b

இம்மை – இப்பிறப்பு

Q.3)Opt: d

- நீலாம்பரி என்ற இன்பமூட்டும் இராகத்திலேயே தாலாட்டுப் பாடல்கள் பெரும்பாலும் பாடப் படுவதுண்டு.

Q.4)Opt: d

நை– இழிவு

Q.5)Opt: a

வாமன் – அருகன்;

Q.6)Opt: a

மருண்டனென் – தன்மை ஒருமை வினைமுற்று;

Q.7)Opt: a

நசை–விருப்பம்;

Q.8)Opt: d

- இவற்றுள் சரியான சொற்றொடர்- வளமை, விவேகம், வேதம், வைகாசி

Q.9)Opt: b

**பெண்மை – புரட்சி**



**முத்துலெட்சுமி**

**(1886 – 1968)**

**தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்**

இந்தியப்பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர். சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர். சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி.

தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், இருதார தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் ஆகியவை நிறைவேறக் காரணமாக இருந்தவர். அடையாற்றில் 1930இல் அவ்வை இல்லம், 1952இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.

Q.10)Opt: a

- ‘அங்காடி நாய் போல’அலைந்தனையே நெஞ்சமே என்பார் பட்டினத்தடிகள்.

Q.11)Opt: a

அம்ம – அசைநிலை;

Q.12)Opt: c

- 1886 ஆம் ஆண்டு திருக்குறளை முழுமையாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

Q.13)Opt: b

- கண் + இமைக்கும் இந்த சொல்லை சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் கண்ணிமைக்கும்.

Q.14)Opt: c

**கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி:** பாண்டிய மன்னருள் பெருவழுதி என்னும் பெயரில் பலர் இருந்தனர். ஆயினும், அரிய குணங்கள் அனைத்தையும் தம் இளமைக்காலத்திலேயே பெற்றிருந்த காரணத்தால் அக்கால மக்கள், இவரை இளம்பெருவழுதி என்று அழைத்தனர்.

Q.15)Opt: b

- கிளைஞர்- உறவினர்
- (எ. கா.)காலாடு போழ்திற் கழிகிளைஞர் . . . பலராவர்
- பகைவன் - எதிரி, விரோதி

Q.16)Opt: b

- எந்தமிழ்நாடு என்ற சொல்லை பிரிக்கும் போது
- எம் + தமிழ்+நாடு என பிரிக்க வேண்டும்.

Q.17)Opt: a

- கரும்பை பிழிவதற்கு எந்திரங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. இதனைத் "தீம்பிழி எந்திரம் பந்தல் வருத்த" என்னும் பதிற்றுபத்து வரிகள் குறிப்பிடும்.

Q.18)Opt: d

- ஒரு அடியின் முதல், இரண்டு மற்றும் நான்காம் சீர்களில் ஒன்றாக வருவது கீழ்க்கதுவாய் மோனை
- (எ.கா): ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
  உயிரினும் ஓம்பப் படும்.

Q.19)Opt: c

- சட்டை முனி தமிழ்நாட்டுச் சேணிய வகுப்பைச் சார்ந்தவர்.
- இவர் சரக்கு வைப்பு, நவரத்தின வைப்புகளில் தேர்ந்தவர். நிகண்டு, வாத காவியம், சரக்கு வைப்பு, நவரத்தின வைப்பு, வகாரம் தீட்சை, ஞான விளக்கம் உள்ளிட்ட 14 நூல்கள் இயற்றியுள்ளார்.

Q.20)Opt: b

- காறல் ; தொண்டையில் உண்டாகும் கறகறப்பு, ஒரு மருந்துச்செடி
- காரல் - ஒரு வகை மீன்